முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி கார்த்திகை மாதம் 16ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 23ம் திகதி வரை**

**டிசம்பர் 2ம் திகதி முதல் டிசம்பர் 9ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **தரும பலம் கொண்ட தமிழகமே**
**தலைமைக்கு சிறந்த பாரதமே**
**வறுமையிலும் தயவு பெருக்கும்**
**வந்தாரை வாழ வைக்கும் தமிழகமே**

2. **தமிழகம் இந்திய பூமி தன்னில்**
**தக்க விளம்பி தேள் திங்களில்**
**நேமமுடன் மூவையோர் திகதி மேல் மூவேழீர் திகதி வரை**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிறு முடிய)**
**நிகழ்வாக எதிர்கால பலன் தன்னை**

3. **தன்னிலே வார ஆசியாக**
**தாமுரைப்பேன் சுப்பிரமணியர் யானும்**
**அண்ணல் அரங்கன் கேட்க**
**அருளுவேன் இந்தவித காலம்**

4. **காலமதும் இயற்கை சீற்றம்**
**கஜா புயலாக தென்தமிழகத்தை**
**கோலம் பலவாறாக்கி குறைபடுத்தி**
**குடும்பம் உடமை உணவு என மக்கள்**

5. **மக்கள் தவிக்கும் இடர் தந்திருக்க**
**மக்களை மக்களே காத்துக் கொள்ள**
**தேக்கமிலா சேவை பெருகிவர**
**தேவைக்கு உதவி மீட்கும் அரசபதவி**

6. **பதவி ஆளுமைகள் தயவு கூட்டி**
**பணியென கருதா சேவையாக**
**ஆதரவாய் இறங்கி உதவிகள்**
**அளவிலா செய்து மீட்டால்தான்**

7. **மீட்டால் தான் தென்னகம் மீளும்**
**மேலான நிலைமைக்கு வரும்**
**தட்டியே மத்தியும் அசட்டை**
**தவறுகள் கால நீட்டிப்பாக செய்தால்**

8. **செய்தால் உயிர் பலி கூடும்**
**சேவையிலா செயல்படும் நிலைக்கு**
**மெய்படா நடுவண் மாநில**
**மண்ணாளும் அரசுகள் இருந்தால்**

9. இருந்தாலோ வரும் காலமதில்
இருந்த சுவடுகள் தெரியவே இல்லா
வருந்தும்படி பதவி ஆளுமை
வல்லமை இழந்து வாட நேரும்

10. நேருமைபட கழனி பூமிகள்
நிலவுலகில் டெல்டா பகுதிகள்
வருமுலகில் காக்கப்பட்டால்தான்
வலிய சேவை ஆற்றி மீட்டால்தான்

11. மீட்டால் தான் ஆளுமை சிறக்கும்
மேன்மைபட தொடர் சேவைகளை
திட்டங்கள் வழி நிறைவேற்ற
தென்னகம் தன் பலம் பெறும்

12. பலமான இந்தவகை சீற்றம்
பகை கொண்ட இயற்கை அழிவுகள்
வளமான மனிதன் மனநிலை
வல்லமையான தருமசிந்தை மாறியதால் தான்

13. தான் என்ற சுயபலம் பெருகி
தனதென்று கொள்கை வெறியாகி
ஊண் உண்டு மனிதன் மிருகமாகி
உழலுகின்ற போக்கே அழிவின் நெறி

14. அழிவின் குறி அகல பாதுகாப்புற
அறமிகுந்த அருள்மிகுந்த தமிழகம்
பழிபாவமான உயிர்க்கொலை நீக்கி
பண்பான தயவு நெறி கூட்டி

15. கூட்டி சைவ நெறி முறை
குறைபடா எல்லா மக்களும்
தட்டாது ஏற்று உண்மை ஆன்மீக
தவராசன் அரங்கன் கொள்கை வழி

16. வழிகள் தனை ஏற்று வருக
வல்லமையான ஞான பக்குவம்
அழிவில்லா இயற்கை பாதுகாப்பும்
அரணாக பெருகி தமிழகம் வலுப்பெறும்

17. வலுவான இயற்கை சீற்றங்கள்
வக்கிரமான செயல்பாடுகளில்லா
வலுப்பெறும் இந்தியாவும் தமிழகமும்
வழுத்திய வார ஆசி முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார கால நிகழ்வுகள்**

தருமங்களை செய்து செய்து தருமபலம் பெற்றிட்ட தமிழகமே சிறந்த பல தலைமைகளை கொண்டு ஆட்சி செய்யப்பட்ட சிறப்புமிக்க பாரததேசமே வறுமை உள்ள போதும் தம்மை நாடி அபயம் என வந்தவர்களை வாழ வைக்கின்ற தமிழகமே விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 16ம் நாள் 02.12.2018, ஞாயிறு முதல் கார்த்திகை மாதம் 23ம் நாள் 09.12.2018 ஞாயிறு முடிய உள்ள காலத்தில் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

தற்காலத்தில் இயற்கை சீற்றமானது கஜா புயல் எனும் பெயரிலே தமிழகத்தை தாக்கி தமிழகத்தில் பெரும் பாதிப்பை உண்டுபண்ணியுள்ளது. அதனால் தமிழக மக்கள் குடும்பம், உடைமைகள், உணவு என எல்லாவற்றையும் இழந்து தவிக்கின்ற சூழ்நிலை உருவாகியுள்ளது. மக்களை மக்களே காத்துக்கொள்ளும் விதமாக மக்களிடம் தன்னார்வ சேவை பெருகி மக்களை மக்களே காத்துக் கொண்டார்கள்.

மக்களின் தேவைக்கு உதவிகள் செய்ய வேண்டிய அரசின் பதவியில் உள்ள ஆட்சி பொறுப்பாளர்கள் அவர்களிடம் தயவு உணர்வினை அதிகப்படுத்தி இது பணி என கருதாமல் சேவை மனப்பான்மையுடன் களம் இறங்கி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாய் செயல்பட்டு உதவிகள் தம்மை அளவிலாது செய்து மீட்க வேண்டும்.

அரசு பதவிகளில் உள்ளவர்கள் மெத்தனம் காட்டாமல் சேவை மனப்பான்மையுடன் தாராளமாய் செயல்பட்டால்தான் தமிழகத்தை மீட்டு பழையநிலைக்கு கொண்டு வர முடியும். இதற்கு மத்திய அரசும் ஒத்துழைப்பு நிதிஉதவிகளை தாராளமாய் தந்திட வேண்டும்.

மத்திய அரசு தமிழகத்தை கண்டும் காணாமல் விட்டு, அசட்டையாக இருந்தால் கால நீட்டிப்பு செய்தால் தமிழகத்தினில் உயிர்பலிகள் அதிகமாகும்.

மத்திய மாநில அரசுகள் தொண்டின் அடிப்படையில் சேவை மனப்பான்மையுடன் செயல்படாவிட்டால் வருங்காலங்களில் சுவடுகள் தெரியாமல் வருந்தும்படி பதவிகளையும் ஆட்சி பொறுப்புகளையும் ஆட்சி செய்யும் வல்லமைகளையும் இழந்து வாடிட நேர்ந்திடும்.

தர்மத்தின்படி விவசாய மக்களும் விவசாய நிலங்களும் காக்கப்பட்டால்தான் நாடு முன்னேறும். விவசாய மக்களை அரசு சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டு மீட்டால்தான் அரசின் ஆட்சி சிறப்பான ஆட்சியாக அமைந்திடும். உயர்ந்த திட்டமிட்ட பணிகளின் மூலம் தொடர்ந்து செயல்பட்டால்தான் தமிழகம் தனது உண்மையான பலத்தினை பெற்றிடும்.

மனிதனின் தர்மசிந்தைகள் மாறி மக்களிடம் செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை குறைந்து தயவு உணர்வு மக்களிடையே குறைந்திட்டதால்தான் இயற்கையும் கோபமுற்று இயற்கை மனிதனுக்கு பகையாகி இயற்கை பேரிடர்கள் உருவாகின்றன.

தான் என்ற சுயநலம் பெருகி தனது தனது உடமை என்ற தன்னல கொள்கை வளர்ந்து அதுவே வெறியாகி மனிதன் உயிர்க்கொலை செய்து மாமிசத்தை உண்டு மனிதன் மிருகமாகி உழலும் போக்கினால்தான் அழிவு உண்டாகிறது.

இப்படிப்பட்ட அழிவுகள் நடைபெறாமல் இருக்க வேண்டுமாயின் அழிவின் குறி அகன்று பாதுகாப்பு பெற்றிட, அறம்மிகுந்த அருள்மிகுந்த தமிழகம் பழிபாவத்தை உண்டாக்கும் உயிர்க்கொலையை நீக்கி, பண்புமிக்க தயவு நெறியை அதிகமாக்கி சைவநெறிமுறை குறைபடாது நடந்து எல்லா மக்களும் கொல்லாநெறியை தட்டாது ஏற்றுக் கொண்டு உண்மை ஆன்மீகம் உரைக்கும் தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உண்மை ஆன்மீக கொள்கை வழியில் தம்மை இணைத்துக் கொண்டு அரங்கன் கொள்கையை முழுமனதாக ஏற்று நடந்து வர வேண்டும்.

மக்கள் அரங்கனின் தூயநெறிக் கொள்கையை ஏற்று நடந்து வரவர, வல்லமைமிக்க ஞானபக்குவங்கள் உண்டாகி நாட்டினில் இயற்கை பேரழிவுகள் வராமல் பாதுகாப்பு உண்டாகி தர்மபலம் பெருகி தர்மபலம் நாட்டிற்கு அரணாக அமைந்து தமிழகம் வலுப்பெறும். வலுவான இயற்கை சீற்றங்கள் இல்லாத வக்கிரமான செயல்பாடுகள் இல்லாத தூய தமிழகமாக தமிழகம் வலுப்பெறும், இந்தியாவும் தமிழகமும் நல்ல தயவுடை நாடாய் மாறிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–